செ.வெ.எண் : 14/ மே நாள் : 15.05.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## 3,75,187 குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.2000/- கொரோனா நிவாரணத் தொகை வழங்கும் பணிகள்

## மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (15.05.2021) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள், மாவட்ட அளவில் குடும்ப அட்டைதாரர்களுக்கு முதல் தவனை கொரோனா நிவாரணத் தொகை ரூ.2000/- வழங்கும் பணிகளை துவக்கி வைத்து, மாவட்டத்தில் மேற்கொள்ளப்படடுள்ள பல்வேறு கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப்குமார் ,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் (இராமநாதபுரம்), திரு.எஸ்.முருகேசன் அவர்கள் (பரமக்குடி), திரு.ஆர்.எம்.கருமாணிக்கம் அவர்கள் (திருவாடானை), மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.உ.திசைவீரன் அவர்கள் உட்பட அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் பலர் உடனிருந்தனர்.

கூட்டத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள், கொரோனா பரவல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு தமிழகம் முழுவதும் முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்திட உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரணத் தொகையாக தலா ரூ.4000/- வழங்கப்படும் எனவும், நடப்பு மே மாதத்திலேயே முதல் தவனையாக ரூ.2000/- வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் 3,75,187 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.75 கோடியே 03 இலட்சத்து 74 ஆயிரம் மதிப்பில் நிவாரணத் தொகை வழங்கும் பணிகள் இன்று முதல் துவங்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு இந்த நிவாரணத் தொகை சிரமமின்றி முழுமையாக சென்று சேர்வதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும்.

மாவட்டத்தில் கொரோனா சிகிச்சைக்காக இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை உட்பட அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1500 படுக்கைகளும், 4 தனியார் மருத்துவமனைகளில் 200 படுக்கைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், இராமநாதபுரம் சேதுபதி அரசு கலைக் கல்லூரி, அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரி, பரமக்குடி அழகப்பா கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரி, அரசு கலைக் கல்லூரி ஆகிய 4 இடங்களில் கொரோனா பாதுகாப்பு மையங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் மொத்தம் 524 படுக்கைகள் என மொத்தம் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதில் ஆயிரம் படுக்கைகள்ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கைள் ஆகும். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மட்டும் மொத்தம் 600 ஆக்சிஜன் படுக்கைகள் உள்ளன.

இக்கட்டான இந்த காலகட்டத்தில் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்து முன்களப் பணியாளர்களின் தன்னலமற்ற பணி பாராட்டுதலுக்குரியது. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை பெறும் பொதுமக்களிடத்தில் மருத்துவர்கள் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டும். கொரோனா சிகிச்சை பெற்று வரும் நபர்களுக்கு மூன்று வேளை சத்தான உணவு, கபசுர குடிநீர், எழுமிச்சை பழச்சாறு, வேர்கடலை/கொண்டக்கடலை/பாசிப்பயிறு போன்ற ஊட்டச்சத்து நிறைந்த உணவு பொருட்கள் சரியான முறையில் வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டும். பொதுமக்களிடையே கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்வதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்து தடுப்பூசி போட்டுக் கொள்ள ஊக்கப்படுத்திட வேண்டும்.

கொரோனா தடுப்பு பணிகளில் கவனம் செலுத்தும் அதே வேளையில் பொதுமக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் விநியோகம், மின்சார வசதி, சாலை வசதி, பொது விநியோக திட்ட பணிகள் உள்ளிட்ட அனைத்து பணிகளும் பொதுமக்களுக்கு முழுமையாக சென்று சேரும் வகையில் அனைத்துத் துறை அலுவலர்களும் முனைப்புடன் பணியாற்றிட வேண்டும் என மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பெற்று வருபவர்களுடன் வீடியோ அழைப்பு மூலம் உரையாடி அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சை மற்றும் உணவு குறித்து கேட்டறிந்தார்கள். மேலும், மருத்துவமனையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள படுக்கைகள் மற்றும் ஆக்சிஜன் இருப்பு குறித்தும் ஆய்வு மேற்கொண்டு மருத்துவ அலுவலர்களிடம் கேட்டறிந்தார்கள். சிகிச்சை பெறுவோருக்கு சத்தான உணவு தரமான முறையில் போதிய அளவு வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டும் என மருத்துவ அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்

இந்த நிகழ்வுகளின் போது, இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.எம்.அல்லி, பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.து.தங்கவேல், மருத்துவ நலப் பணிகள் இணை இயக்குநர் மரு.அ.சகாய ஸ்டீபன்ராஜ், துணை இயக்குநர் மரு.இரவீந்திரன், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.வீ.கேசவதாசன் உட்பட அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**